**HMOP NO. 209 /2024**
**Date 05.03.2026**
**ம.சா.1 சரஸ்வதி**
**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு கை, மற்றும் கால்கள் சற்று ஊனம் என்றால் சரிதான். இந்த விவரத்தை எனது திருமணத்தின்போது எனது கணவரான முருகராஜ் என்பவருக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு அப்பா, அம்மா உள்ளார்கள். நான் கொடுத்த புகார் மனுவில் எனக்கு திருமணத்தின்போது போடப்பட்ட 10 பவுன் நகை வாங்கியதற்காக ரசீது உள்ளதா என்றால் எனது பெற்றோரிடம் தான் கேட்க வேண்டும். மேற்படி நகைகள் எங்கு உள்ளது என்றால் எனது அண்ணன் அடமானம் வைத்து எனது கணவருக்கு ரூ. 5 லட்சம் பணம் கொடுத்தோம். மேற்படி நகைகளை எந்த வங்கியில், எந்த தேதியில் வைக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது எனது அண்ணன் மற்றும் எனது கணவரும் தான் அடகு வைத்தார்கள். அடமானம் வைத்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நகைகள் யார் பெயரில் வைக்கப்பட்டுள்ளது என்றால் எனது அண்ணன் பெயரில் தான் வைக்கப்பட்டுள்ளது. எனக்கு திருமணம் ஆகி எனது கணவருடன் பாட்டத்தூரில் உள்ள ஓடு போட்ட வீட்டில் வசித்து வந்தோம். எனது பண்ட பாத்திரங்கள் எல்லாம் எங்கு உள்ளது என்றால் பாட்டத்தூரில் தான் உள்ளது. எனக்கு எந்த கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் சங்கரநாராயண கோவில் முன்பு திருமணம் நடைபெற்றது. மேற்படி சாமி யானது எத்தனையாவது சாமி என்றால் 3 வது சாமி ஆகும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன் ஆனால் 10 ம் வகுப்பு தேர்ச்சிப்பெறவில்லை. எனது அப்பா பெயர் மாடசாமி, எனது அண்ணன் பெயர் மாடசாமி ஆகும். எனது அண்ணன் எங்களது திருமணத்தின் போது பூ கடை வைத்திருந்தார். தற்போது இல்லை. நாளது தேதி வரையிலும் பாட்டத்தூரில் உள்ள வீடு புதுப்பிக்கப்படவில்லை என்றால் இல்லை கட்டியுள்ளார்கள். நான் எனது மாமியார் வீட்டிற்கு சென்று பார்த்த போது வீடு முழுவதுமாக கட்டி முடிக்கவில்லை. எனது கணவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால்

சாயப்பட்டறையில் வேலை செய்து வருகிறார். எனது கணவர் தற்போது கொத்தனார் வேலை செய்து வருகிறார் என்றாலும், அதன் மூலம் நாள் ஒன்றுக்கு 1000 ரூபாயும், மாதம் ரூ. 30,000/-ம் சம்பாதித்து வருகிறார் என்றாலும், அந்த வருமானத்தில் தான் எதிர் மனுதாரர் பாட்டத்தூரில் வீடு கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. எனக்கு எங்கு வைத்து குழந்தை பூஜா ஸ்ரீ பிறந்தது என்றால் கோயம்புத்தூரில் உள்ள அரசு மருத்துவமனையில் தான் பிறந்தது. குழந்தை பிறந்த பின்பு எனது கணவர் எத்தனை நாட்கள் கழித்து என்னை பார்க்க வந்தார் என்றால் 1 வாரம் கழித்து பார்க்க வந்தார். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் எனது கணவரும், எனது கணவர் வீட்டாரும் எனது குழந்தையை பார்க்கவரவில்லை என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் எனது கணவர் குடும்பத்துடன் கூட்டாக தான் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் கூடாநட்பு என்று கூறியுள்ளது பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு குடிப்பழக்கம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல, அவர் குடிப்பார். நான் சொல்லியுள்ள வாடகை வீட்டுக்கு மாத வாடகை எவ்வளவு என்று கேட்டால் மாத வாடகை ரூ. 5000/- . நாங்கள் எந்த தெருவில் குடியிருந்தோம் என்றால் கிருஷ்ணவேணி மருத்துவர் மருத்துவமனை அருகில் குடியிருந்து வந்தோம். தெரு பெயர் ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் எதிர் மனுதாரர் என்னுடன் வாடகை வீட்டில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எனது மாமியாருடன் இருக்க விருப்பம் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது கணவரை எனது வீட்டுடன் வந்து குடியிருக்க சொன்னேன் என்றால் சரியல்ல. நான் சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதற்காக புகார் கொடுத்தேன் என்று கேட்டால் வேற பெண்களுடன் பேசிக்கொண்டு என்னை ஊனமானவர் என்று சொல்லி என்னை வேண்டாம் என்று கூறியதால் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் விசாரணையில் சேர்ந்து வாழ சொன்ன போது எதிர் மனுதாரர் என்னை அழைத்து செல்ல மறுத்துவிட்டார். திருமணத்தின்போது எவ்வளவு

பணம் ரொக்கமாக கொடுத்தோம் என்றால் ரூ. 20000/- கொடுத்தோம். மேற்படி ரொக்க பணத்தை எனது அண்ணன் திரும்ப வாங்கி விட்டார் என்றால் சரியல்ல. நான் திருமணத்தின்போது எனக்குள்ள ஊனத்தை மறைத்து திருமணம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னால் சாதாரணமாக செய்யக்கூடிய வேலையை செய்ய முடியாது என்றாலும், என்னை நானே பராமரித்துக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல. என்னால் எல்லா வேலையையும் செய்ய முடியும். எனது கணவர் தான் அனைத்து வேலைகளையும் செய்வார் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் எனது கணவரை தனிக்குடித்தனத்திற்கு வரச்சொல்லி அவரை கஷ்டப்படுத்தி'னேன் என்றால் சரியல்ல. நாங்கள் சேர்ந்து வாழ்ந்தபோது எதிர் மனுதாரருடன் சண்டைப்போட்டுக் கொண்டு வால்பாறை செல்வேன் என்றால் சரியல்ல. மனுவில் நான் குழந்தை பிறந்தபின்பு வால்பாறைக்கு சென்று விட்டேன் என்று சொல்லியுள்ளதற்கு முரணாக தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது குழந்தையை எதிர் மனுதாரருக்கு கொடுக்க சம்மதமா என்றால் இல்லை. நான் எனது கணவருடன் வாழ விருப்பம் இல்லாமல் அவருக்கு பொருளாதார ரீதியாகவோ, மன ரீதியாகவோ கஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நகைகளை அடமானம் வைத்துள்ளதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக உள்ளேன். நான் எனது அண்ணனின் தூண்டுதலின் பேரில் எதிர் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வீட்டை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.